3rd May 1957]

The Hon. Sri C. SUBRAMANIAM : கடிதம் எழுதி தீர்க்க முடியும் என்றால் இது எவ்வளவோ வருஷத்திற்கு முன்னால் தீர்ந்திருக்க வேண்டும். இதைப்பற்றி சமீபத்தில்தான் எழுதியிருக்கிறோம். அதற்குள்ள பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Sri M. JAGANNATHAN: ஸார், இந்தப் பிரச்னையை மத்தியஸ்த்திற்கு விட்டிருப்பதினால் எவ்வளவோ காலதாமதம் ஆகிறது. இதனால் ஜனங்களுக்குப் பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் ஏற்படுகிறது. ஆகவே இதை தீர்ப்பதற்கு எந்தெந்த பிரதேசங்களில் எல்லைப் பிரச்சினைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பொது ஜன வாக்கெடுப்பு **(plebiscite)** முறையை நடத்த சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லக்கூடிய முறை அதிகமான குழப்பத்தையே ஏற்படுத்தும் என்று நினைக்கிறேன்.

Sri D. S. ATHIMOOLAM : கனம் ஐயா, ஆந்திர சர்க்காரும் சென்னை சர்க்காரும் இவ்வளவு காலமும் இந்தப் பிரச்னையை தீர்க்காமல் இருப்பது தமிழ் மக்களுக்கு பெரும் கவலையை உண்டாக்கியிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் நல்லது.

Wage Board for Textile Industry.

Mr. SPEAKER : Mr. Kalyanasundaram will put question No. 3.

Sri K. VINAYAKAM : Sir, . . .

Mr. SPEAKER : I have already called Mr. Kalyanasundaram to put question No. 3.

Sri K. VINAYAKAM : Sir, even before the next question was called . . .

Mr. SPEAKER : Mr. Kalyanasundaram will put the question standing in his name.

* 3 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have made any proposal regarding the constitution of a Wage Board for textile industry; and

(*b*) whether the Central Government have constituted the Board in consultation with the State Government?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have constituted a Central Wage Board for the cotton textile industry in consultation with this Government.

Sri M. KALYANASUNDARAM : அந்த போர்டில் யார் யார் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டும் என்பதையும் மாகாண சர்க்கார் நிர்ணயித்திருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: இந்த போர்டில் மூன்று தரப்பிலுள்ள பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இண்டிபெண்டன்ட் பிரதிநிதிகளும் முதலாளிகள் பிரதிநிதிகளும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். முதலாளிகள் பிரதிநிதிகளையும் தொழிலாளிகள்

[3rd May 1957

பிரதிநிதிகளையும் அந்தந்த பெடரேஷன்கள் மூலம் கலந்தாலோசித்து நியமிக்கிறார்கள். இண்டிபெண்டண்ட் பிரதிநிதிகளை நமது சர்க்காரோடு கலந்தாலோசித்துதான் மத்திய சர்க்கார் நியமித்து இருக்கிறார்கள்.

SRI S. PAKKIRISWAMI PILLAI : நமக்குத் தெரியும். சென்னை ராஜ்யத்தில் கூட்டுக்கமிட்டி ஒன்று நியமித்து அதன் மூலமாக ஒரு ரிப்போர்ட்டும் தயாரித்து வெளியிட்டு ஐந்து ஆண்டு காலம் கடந்து விட்டது. அதன் பின்னால் இந்த அகில இந்திய சம்பள கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிஷன் நியமிக்கும் வழிகள் ஒன்றும் தொழிலாளர்களுக்கு உதவி செய்யாது என்ற படிப்பினையைதான் அதன் சாராம்சத்திலிருந்து தெரிகிறது. ஆகவே நான் மந்திரி அவர்களைக் கேட்கிறேன். இது தொழிலாளர்கள் மத்தியில் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் திட்ட கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது இதில் வேறு ஏதாவது உண்மையிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் இந்த கமிட்டியை நியமித்திருக்கிறதினால் தொழிலாளர்களுடைய சம்பள பிரச்னைகள் எல்லாம் தீரும் என்றுதான் நான் நினைக்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : பஞ்சாலை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த போர்டின் மீது ஆட்சேபனைசெய்து தென்னிந்திய முதலாளிகள் சங்கம் ஒரு ஆட்சேபனைக் குறிப்பு அனுப்பியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கலாம். எங்களுக்கு அனுப்பவில்லை.

SRI P. S. CHINNADURAI : பல பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து இந்த போர்டின் மீது ஆட்சேபனை செய்து தீர்மானம் நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் அனுப்பியிருப்பது தொழில் மந்திரி அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் ஆரம்பத்திலே கூறினேன். இந்த போர்டை நியமித்தது மத்திய சர்க்கார். தற்போது மாகாண சர்க்கார் இதில் ஒன்றும் செய்ய முடியாது. மாகாண சர்க்காருக்கு அனுப்பியிருந்தால் அதை மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கும்.

SRI M. KALYANASUNDARAM : இதில் மாகாண சர்க்காருக்கும் கடமை இருக்கிறது. நம்முடைய மாகாணத்திலுள்ள தொழிலாளர்களை பொறுத்த வரையில் தொழிலாளர் பிரதிநிதிகள் என்ற முறையை ஆட்சேபித்து மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் எழுதி அனுப்பியிருக்கிறது. மாகாண சர்க்கார் இதில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது மத்திய சர்க்காரே தவிர மாகாண சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

11-15 **SRI N. K. PALANISAMI :** இம்மாதிரி 'வேஜ் போர்டு' ஏற்
a.m. படுத்தியிருக்கும் பொழுது, ஒரு 'ஆர்பிட்ரேஷன் போர்டு' ஏற்படுத்தி அந்தந்த பகுதியிலிருக்கும் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் சமரஸம் செய்கிறார்கள். தொழிலாளர்கள் கட்டுப்படுகிறார்கள். முதலாளிகள் கட்டுபடமாட்டேன் என்கிறார்கள். உதாரணமாக கோயம்புத்தூரில் வேலை பளு, சம்பள உயர்வு முதலிய பிரச்னைகளைப்பற்றி ஆறு மாதங்களுக்கு முன்பாக ஒரு சமரஸம் ஏற்பட்டது. இரண்டு மாதங்கள் கழித்து அது உடைந்துவிட்டது. வேலை பளுவை அதிகமாக திணிக்க முதலாளிகள் முற்படுகிறார்கள். 'வேஜ் போர்டு' ஒரு பக்கம், மற்றொரு பக்கம் 'ஆர்

பிட்ரேஷன் போர்டு' ஏற்படுத்தப்பட்டிருப்பதால் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. இம்மாதிரி முரண்பாடுகள் ஏன் ஏற்படவேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு போர்டுகளுக்கும் எந்த விதமான முரண்பாடும் இல்லை. 'வேஜ் போர்டை' மத்திய சர்க்கார் நியமிக்கிறார்கள். பஞ்சாலைத் தொழில் 'வேலை பளு முதலியவற்றை நிர்ணயிப்பதற்காக 'ஆர்பிட்ரேஷன் போர்டுகளை' நாம் அமைக்கிறோம். இந்த போர்டுகளின் வேலை முறைகளில் எந்தவிதமான முரண்பாடும் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

அடுத்தப்படியாக இவைகளெல்லாம் நிறைவேற்றப்படுமா, நிறைவேற்றப் படாதா என்பது சட்டப் பிரச்னை. அதைப்பற்றி நான் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

SRI K. ANBAZHAGAN : அவைத்தலைவர் அவர்களே, இத்தகைய தொழிலாளர்களுடைய கூலி பிரச்னையை தீர்ப்பதற்குக்கூட மாநில சர்க்காருக்கு தனி உரிமைகள் இல்லை என்று தெரிவிக்கின்ற அமைச்சர் மாநில சர்க்காரின் உரிமைகளை மிகுதிப்படுத்துவதற்கு ஏதேனும் தனி நடவடிக்கைகளை எடுக்க முற்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member may put a separate question on that subject.

SRI P. S. CHINNADURAI : இந்த போர்டில் தொழிலாளர் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு முன்பாக எந்த அகில இந்திய தொழிலாளர் சம்மேளனத்தை இந்திய அரசாங்கம் கலந்துகொண்டார்கள் என்பதை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சின்னதுரை அவர்கள் பார்லிமெண்டிற்கு சென்று இந்தக் கேள்வியை அங்கு நன்றாகக் கேட்டிருக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM: மந்திரி அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னர் மத்திய சர்க்கார் சம்மேளனத்தை கலந்துகொண்டு தொழிலாளர் பிரதிநிதிகளை நியமித்ததாக சொன்னார்கள். எந்த சம்மேளனத்தை கலந்துகொண்டார்கள் என்பதை அறியலாமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: மத்திய சர்க்கார் அகில இந்திய சம்மேளனத்தை கலந்துகொண்டு நியமித்ததாக எங்களுக்குச் சொல்லுகிறார்கள்.

Emoluments of the non-gazetted officers and last-grade servants

* 4 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have made any representation to the Finance Commission at its sittings in Madras during March 1957, regarding the demand of the non-gazetted officers and the last-grade staff of the State Government for revising their scales of pay and dearness allowance on the basis of the Central Pay Commission's recommendations?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. But I would like to state that the representation has reference to dearness allowance mostly.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் பஞ்சப்படி சம்பந்தமாக மட்டும் தெரிவித்திருப்பதாக குறிப்பிட்டார்கள். மத்திய சம்பளக் கமிஷன் செய்திருக்கக்கூடிய சிபார்சுகளை அப்படியே ராஜ்ய சர்க்கார்